# பசுபதீயம்



சு. பசுபதி அவர்களின் நினைவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் சு. பசுபதி

கண் மகிழ்: 29-11-1935

மண் நெகிழ்: 26-08-2006

## திதி வெண்பா

ஆண்டு விய வருடம் ஆவணியின் பூர்வபட்சம்
பூண்டதிதி துதியை தனில் - போயடைந்தார்
பார்புகழ வாழ்ந்த பசுபதி எனுங் கோமான்
கார் குழலாள் மைந்தன் கழல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "பசுபதீயம்"



## அமரர் சுப்பிரமணியம் பசுபதி

அவர்களின்

## நினைவு வெளியீடு

27-09-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

பந்தமும் பாசமும்
பரிவும் காட்டி பாரினில் வாழும்
முறை இது தான் என்று அகிலமும்
எண்ணியெண்ணி வியக்கும் வண்ணம் சாதனை
யாய் சாந்தமொடு வாழ்ந்த உங்களைப் போல்
வாழ்ந்தாலே போதுமே என்று எமது அன்பு
தந்தையே உங்கள் நினைவாக
தங்கள் திருப்பாதங்களுக்கு
இம்மலர் சமர்ப்பணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எம் நினைவுகளில் .....

எமது அன்பு அப்பா இன்று எம் மத்தியில் இல்லை,
அவரின் நினைவுகள் நெஞ்சில் கிடக்கின்றன,
அவரது குரல் காதுகளில் கேட்கிறது.
அவரது தோற்றம் அவரது அசைவுகள் செயற்பாடுகள்
அனைத்தும் இனிவரும் காலங்களில் எம் வாழ்வியக்கத்தில்
மனத்திரையில் மட்டும் சஞ்சரிக்கும்.

அவரது இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.
அவரது இழப்பு அறிந்து எம்முடன் துயர் பகிர்ந்து
கொண்டவர்கள் பல நூறு பேர்.
அவர்கள் தமக்குத் தெரிந்த வழிகளிலெல்லாம்
தம் துயரை வெளிக்காட்டினார்கள். அந்த
"மனிதத்துவச் செயற்பாடுகள்"
எமக்கு எமது குடும்பத் தலைவனின் இழப்பைத்
தாங்கும் சக்தியை கொடுத்தன. எம்மை
ஆற்றுப்படுத்திய அனைவரும்
எம் நெஞ்சில் நிறைந்திருக்கின்றார்கள்.

எமது அன்பு அப்பா தன் வாழ்வில் பல பாத்திரங்களை வகித்திருந்தார். குடும்பத்திலும் பொது சேவையிலும் ஆன்மீகத்திலும் பங்கு வகித்திருந்தார். ஒவ்வொரு இடத்திலும் இவரது பங்களிப்பு முக்கியமாகப் பேசப்படுகின்றது. பத்திரிகை, சஞ்சிகைகளில் "வில்வம் – பசுபதி" எனும் புனை பெயரில் வெளியிட்ட அவரது ஆக்கங்களை முப்பத்தியோராம் நாள் நினைவாக வெளியிடுவதில் ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

அப்பா மூச்சிழந்தபோது உடல் வீட்டில் இருக்கின்றதே என்று ஆறுதல் அடைந்தோம். அந்த ஆறுதல் இரண்டு நாள்களுடன் முடிந்தது. அது போக ஒரு மாதகாலம் அவரது "அஸ்தி" வீட்டு முற்றத்தில் கிடக்கின்றது என்ற ஆறுதல் மனதில் இருந்தது. அதுவும் இத்துடன் முடிந்து போகின்றது.

இனி எங்கள் மனங்களில் மட்டுமே அவரின் உருவம் நிழலாகும்.. இறைவா! அதைத் தாங்கும் சக்தியை எமக்குத் தா.

**– பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உ
சிவமயம்

# தோத்திரப் பாமாலை

## தேவாரம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
முளைத் தீபோல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே.

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிருநீறுங்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந்
துன்னு பொற் குழற்திருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினை தொறும் என்மனம்
தழல் மெழு கொக்கின்றதே!

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்காய்க் சாய்த்தனை - அடியேற்கின்று
ஞாலம் நின் புகழேயாக வேண்டும் நான் மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

*பக்தியால் யானுனைப் பலகாலும்*
*பற்றியே மாதிருப் புகழ்பாடி*
*முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்*
*முத்தியே சேர்வதற் கருள்வாயே*
*உத்தமா தானசற் குணநேயா*
*ஒப்பிலா மாமணிக் கிரிவாசா*
*வித்தகா ஞானசத் திநிபாதா*
*வெற்றி வேலாயுதப் பெருமாளே!*

## வாழ்த்து

*வான்முகில் வழாது பெய்க*
*மலிவளம் சுரக்க மன்னன்*
*கோன்முறை அரசு செய்க*
*குறைவிலா துயிர்கள் வாழ்க*
*நான்மறை அறங்கள் ஓங்க*
*நற்றவம் வேள்வி மல்க*
*மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்.*

**ஆற்றல்களுக் கெல்லாம் அடிப்படையாய் இருப்பது ஒழுக்கமேயின்றி வேறு எதுவும் அன்று. எல்லோர் இடத்திலும் சம அன்பு கொள்ளுதல் மிகமிகக் கடுமையான ஓர் ஒழுக்கமாகும். இந்த ஒழுக்கம் இன்றி முத்தி கிடையாது.**

**–சுவாமி விவேகானந்தர்–**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சாயி பஜனை

## விநாயகர்

ஓம் என்னும் பிரணவரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் வேத நாயகா
தேவாதி தேவனே விநாயகா
வல்வினைகள் தீர்க்கும் பர்த்தி நாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மோனத்தின் முழுப் பொருளே நாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா.

## குரு

மனுவா போலோ குரு சரணம்
மானஸ பஜரே குரு சரணம்
ஸ்ரீ குரு சரணம் சத்குரு சரணம்
ஸாயி சரணம் நமோ
ஸ்ரீ குரு சரணம் ப்ரபு பாத சரணம்
ஸாயி சரணம் நமோ
சற்குரு சரணம் பாவன சரணம்
ஸாயி சரணம் நமோ.

## சிவன்

சங்கரா ஸ்தாசிவ சந்த்ர சேகரா
சந்த்ர சேகரா ஸாயி சங்கரா
நீல கண்ட சூலதாரி ஸாயி சங்கரா
பாலநேத்ர த்ரிபுராரி ஸாயி சங்கரா
ஸாயி சங்கரா ஸாயி சங்கரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சக்தி

உமையவளே அருள் புரிவாயம்மா
ஓங்கா ரூபிணி அகிலாண்ட நாயகி
அடியார்கள் வினை தீர்க்கும் ஆதிபராசக்தி
நான் செய்த பிழைகள் எல்லாம் பொறுப்பாயம்மா
நான் கேட்கும் வரங்கள் எல்லாம் கொடுப்பாயம்மா
ஜெகதம்பிகே சிவரஞ்சினி

## முருகன்

பழனி முருகா வேல் முருகா
சரணம் சரணம் வேல் முருகா
கணபதி சோதரா வேல் முருகா
கார்த்திகேயா வேல் முருகா
சுப்ரமண்யா வேல் முருகா
அரகரோஹரா முருகா அரகரோஹரா
அரகரோஹரா அரஹரோகரா முருகா.

## இராமர்

பிரேம முதித மனசே கஹோ
ராம ராம ராம் ராம ராம ராம்
ராம ராம ராம் ஸ்ரீ ராம ராம ராம்
பாப கடே துக்க மிடே லேத ராம நாம்
பவசமுதர சுகத நாவ ஏக ராம நாம் (ஸ்ரீராம்)
பரம சாந்தி சுக நிதான மந்த்ர ராம நாம்
நி ராதார கோ ஆதார ஏக ராம நாம் (ஸ்ரீரா)
மாதா பிதா பந்து சகா சப்ஹி ராம நாம்
பக்த ஜனர ஜீவனதன ஏகராம் நாம் (ஸ்ரீராம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிருஷ்ணர்

பால கோபாலா – சாயி
பால கோபாலா
தேவகி நந்தன கோபாலா – பால
வாசுதேவ நந்தன கோபாலா
யசோத நந்தன கோபாலா
நந்த கோபாலா
ஆனந்த கோபாலா
ஸாயி கோபாலா சதய
ஸாயி கோபாலா – (பால)

## நாராயணர்

ஆத்மா ராமா ஆனந்த ரமணா
அச்சுதா கேசவா ஹரி நாராயணா
பவபய ஹரணா வந்தித சரணா
ரகுகுல பூஷன ராஜீவ லோசனா
ஆதி நாராயண அனந்த சயனா
சச்சிதானந்த ஸ்ரீ சத்ய நாராயணா

## சாயிராம்

பஜோரே பால சாயிராம்
பர்த்தி புரீசா சாயிராம் – 2
துவாரக மாயி சாயிராம்
சதா சுக தாயி சாயிராம்
சீர்டி புரீசா சாயிராம்

## சர்வ மதப் பாடல்

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதீத பாவன சீதாராம்
ஈஸ்வர அல்லா தேரே நாம்
சடிகோ சன்மதி தோ பகவான் – ஸாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சர்வ தர்ம ப்ரார்த்தனை

ஓம் தச்சத் ஸ்ரீ நாராயண தூ
புருஷோத்தம குரு தூ
சித்த புத்த து ஸ்கந்த விநாயக
சவிதா பாவக தூ
பிரஹம மஜ்ட து ஜெயஹோவ சக்தி தூ
ஏசு பிதா ப்ரபு தூ
பிரஹம மஜ்ட து யெஹோவ சக்தி தூ
ஏசு பிதா ப்ரபு தூ
ருத்ர விஷ்ணு தூ ராம் கிருஸ்ண தூ
ரஹீம் தா ஓ தூ
வாசு தேவ கோ விஸ்வ ரூப தூ
சிதானந்த ஹரி தூ
அத்வி தீய து அகால நிர்ப்பய
ஆத்ம லிங்க சிவதூ.

## மங்கள ஆரத்தி

ஓம் ஜய் ஜகதீச ஹரே ஸ்வாமி
சத்ய சாயி ஹரே
பக்த ஜன சம் ரஷக (2) பர்த்தி மஹேஸ்வரா
ஓம் ஜய் ஜகதீச ஹரே
சசி வதனா ஸ்ரீகர சர்வ ப்ராணபதே (ஸ்வாமி)
ஆஸ்ரித கல்பல த்கா (2) ஆபத் பாந்தவா
ஓம் ஜய் ஜகதீச ஹரே
மாதா பிதா குரு தெய்வ மு மரியந்தையு மீரே (ஸ்வாமி)
நாத ப்ரம்ம ஜகன்னாதா (2) நாகேந்திர சயனா
ஓம் ஜய் ஜெகதீச ஹரே
நாராயண நாராயண ஓம் சத்ய நாராயணா
நாராயண நாராயண ஓம்
நாராயண நாராயண ஓம்
ஓம் ஜய் சத்குரு தேவா.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஜய் போலா பகவான் ஸ்ரீ சத்ய சாயிராம் மஹாராஜிகி ஜய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எப்போது வருவீர்கள்... அப்பா

காலை எழுந்தவுடன்
உங்கள் பள்ளியெழுச்சி
பொன்னார் மேனியனே
புலித்தோலை அரைக் கசைத்து
எனத்தேவாரம் பாடி – தங்கள்
முருகப் பெருமானுக்கு
பூ வைத்து விளக்கேற்றி
தீபம் காட்டுவீர்கள்

அலுவல்கள் தொடங்கும்முன்
வில்வம்! get me some thing to drink
என்பீர்கள் முகம் மலர
வட்டமாக இருந்து விருந்தோம்பி
வாழ வைத்த தெய்வமே!
எப்போது வருவீர்கள் எங்களுடன்
விருந்தோம்ப

T.V இல் Match போகும்
வந்து எம் அருகிருந்து
"என்னடி ஸ்கோர்" என்பீர்கள்
வீதியில் குண்டு சத்தம் கேட்டால்
"என்னடி பிரச்சனை"? என்பீர்கள்
இப்படி எத்தனை "என்னடி" போட்டு
எங்களை அரவணைத்தீர்கள்
இனி எப்போது வருவீர்கள் அப்பா
"என்னடி" என்று கதைப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கண்டிப்பீர்கள் தண்டிக்க மாட்டீர்கள்;
கண்டித்தாலும் கலைந்திடும்
உங்கள் கோபம் ஒரு நொடிப்பொழுதில்
புத்திமதிகள் சொல்லி நயமாக
எம் மனதை மாற்றுவீர்கள்
இனி எப்போது வருவீர்கள் அப்பா
புத்திகள் சொல்லிட?

நீங்களும் என் மக்கள் தானென்றீர்கள்.
மருமக்கள் இல்லை என்று உம்
வார்த்தையில் நாம் மகிழ்ந்திருந்தோம்
கொடுத்து வைத்தது இவ்வளவே....
கொண்டாடும் மன மொழியாய்
எப்போது வருவீர்கள்
எங்களுடன் கதை பேச?

அக்கா வீட்டை போய் வாறன்
அண்ணை வீட்டை போய் வாறன்
என்று உங்கள் பிறப்பிடம் தேடி
பெரிதும் மகிழ்வீர்களே,
எப்போது வருவீர்கள்! நாம்
உங்களுடன் செல்வதற்கு?

பாட்டிசைத்து பல கதைகள் புனைந்து
நயமாக பல புத்திகள் சொல்லி
எமது வாழ்வுக்கு வித்திட்டீர்களே
சதுர்ஷா! ஆதி! ஆடூரா! என்று
அன்போடு கொஞ்சி அரவணைத்து
எம்மோடு மகிழ்ந்தீர்களே,
எப்போது வருவீர்கள்! அப்பப்பா
உங்கள் மடியில் நாம் தவழ்வதற்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆமாம்! நீங்கள் வாழ்ந்த பாதை
வாழப் போகும் எமக்கு வழிகாட்டி
மனதில் பதிந்து நெருடிச் செல்லும்
தங்கள் பாதை
என்றும் வழிகாட்டும் எங்கள் உயர்வுக்கு
ஓடையில் சலசலத்து ஓடும்
தங்கள் சாம்பலும்
எமக்கு வழிகாட்டும்
போய் வாருங்கள் அப்பா,
வரும்வரை காத்திருப்போம்.

- குடும்பத்தினர்

## வாழ்க்கை

*வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் – அதை நழுவவிடாதீர்கள்*
*வாழ்க்கை ஒரு பயணம் – அதைச் சென்று முடியுங்கள்*
*வாழ்க்கை ஒரு விடுகதை – அதை விடுவியுங்கள்*
*வாழ்க்கை ஒரு விளையாட்டு – அதில் ஈடுபடுங்கள்*
*வாழ்க்கை ஒரு போராட்டம் – அதை வென்று காட்டுங்கள்*
*வாழ்க்கை ஒரு வெகுமதி – அதை ஏற்றுக் கொள்ளுங்கள்*
*வாழ்க்கை ஒரு போட்டி – அதில் வெற்றி பெறுங்கள்*
*வாழ்க்கை ஒரு கலை – அதை அழகுபடுத்துங்கள்*
*வாழ்க்கை ஒரு வேதனை – அதைத் தாங்கிக்கொள்ளுங்கள்*
*வாழ்க்கை ஒரு சவால் – அதை எதிர்கொள்ளுங்கள்*
*வாழ்க்கை ஒரு சோகம் – அதற்கு மனம் தளராதீர்கள்*
*வாழ்க்கை ஒரு பிரச்சினை – அதற்குத் தீர்வு காணுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஜனனத்திற்கும் மரணத்திற்கும் இடையில் சில நினைவுத் துளிகள்

26-08-2006 சனிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு உலக வாழ்வினை நீத்து நித்தியத்துட்கலந்த திரு. சுப்பிரமணியம் பசுபதி எமது நெஞ்சங்களில் தமது நினைவை நிறைத்து விட்டு மறைந்து விட்டார். அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம். வாழ்ந்திருக்கவேண்டும். இருப்பினும், வாழ்வு எங்கள் கையில் இருக்கின்றதேயன்றி, வாழ்வுக்கு முடிவைக் கொணரும் மரணம் எங்கள் கைக்குள் அடங்குவதில்லையே. ஆயினும், மரணத்தைவென்று, இறப்பின் பின்னரும் இறவாது வாழ்கின்றவர் சிலர் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, தமது வாழ்வினை வரலாறாக்கி, மனித வரலாற்றினுள் நிலைத்து விடுகிறார்கள். அன்னவர்தம் வாழ்க்கை வரலாற்றின் பதிவுகள், வாழ்கின்றவர்களுக்கு வழிபாட்டியாக அமையும். அந்த வகையிற்தான் இங்கு சுப்பிரமணியம் பசுபதி அவர்களின் வரலாறு பதியப்படுகிறது.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நமசிவாயம் சுப்பிரமணியம் எனும் நன்மகனும் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த நாகமுத்து சோதிப்பிள்ளை எனும் நல்லாளும் இல்லறத்துள் இணைந்து அதனை நல்லறமாக்கிக் கொண்டதன் விளை பயனாக ஒரு பெண்பிள்ளையையும் இரண்டு ஆண் மக்களையும் பெற்றெடுத்தனர். இவர்களின் தலைப்பிள்ளை பராசக்தி, நடுவிற்பிள்ளை திருஞானசம்பந்தர், கடைக்குட்டி பசுபதி, பசுபதி 29-11-1935 இல் பிறந்தார். கடைசியாக வந்துதித்த இவர் மூத்தவர் இருவரையும் இருந்தேங்கித்தவிக்க விட்டு முந்திச் சென்றுவிட்டார். எவரும் எதிர்பாராத வேளையில், வேளை வந்துவிட்டதெனக்கருதி, வேலை முடித்துச் சென்று விட்டார்.

பசுபதியின் தமக்கையார் பராசக்தி, நாகரட்ணம் என்பவரைத் திருமணம் செய்து, ஒருவருடம் மட்டுமே அவரோடு வாழக்கொடுத்து வைத்தவராக இருந்தார். தனது குறுகியகால இல்வாழ்.வின் நற்பேறாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெய்வேந்திரன் எனும் நன்மகனை பெற்றெடுத்த அவ்விளந்தாய் தனது மகனுக்காகவே வாழ்ந்தார். இன்று மகன் கனடாவில் வாழ்ந்து வருகிறார். அன்னையோ தான் வாழ்ந்த மனையை, உறவை, ஊரை விட்டுச் செல்ல மனமின்றித் தம்பியர் இருவரது வாழ்வைக் கண்டு மகிழ்ந்திருக்கும்போது கடைக்குட்டித்தம்பி பசுபதியைக் காலன் பறிந்துச் செல்ல பரிதவித்துக் கிடக்கிறார்.

பசுபதியின் மூத்தம சகோதரன் திருஞானசம்பந்தர் மானிப்பாய் பிரதேச சபையில் பிரதம எழுதுவினைஞராக இருந்து ஓய்வு பெற்று கொக்குவில் மேற்கில் வாழ்ந்து வருகிறார். அவர் மகேஸ்வரி என்பாரை மணமுடித்து சிவனேசன், சிவபாலன், சிவசக்தி, சிவமலர் என நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளோடு இனிதே வாழ்ந்து வரும் திருஞானசம்பந்தர் தனது அருமைத்தம்பி பசுபதியை இழந்த சோகத்தில் தவிர்த்து நிற்கிறார்.

சாந்துணையும் கற்றல் என்பதற்கமைய இறுதிவரை கற்றலில் ஆர்வம் கொண்டிருந்த பசுபதி தனது ஆரம்ப, இடைநிலைக்கல்வியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் மேல் நிலைக்கல்வியை யா/வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் மேற்கொண்டார். பாடசாலையில் இவர் விளையாட்டு மற்றும் மாணவர் மன்றச் செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டுவந்தார். பாடசாலை உதைபந்தாட்ட அணியில் இவர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். மேலும், வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஆத்மீகச் சூழல் இவரது சமய, சமூக சிந்தனைச் சிறப்புக்கான அடித்தளத்தை இட்டது எனக் கொள்ள இடமுண்டு.

தனது கல்வியைச் சிறப்புறப் பெற்றுக்கொண்ட பசுபதி 1958 இல், தனது 23 வது வயதில் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து தொழில் வாழ்வினை ஆரம்பித்தார். பாடசாலை வாழ்வில் அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், அவரது தொழில் சார்ந்த வாழ்வில் மேலும் பன்மடங்கு பரந்து விரிய வாய்ப்பேற்பட்டது. 32 வருடகாலத் தொழில் வாழ்வில் பசுபதி, நீதித்துறை, கல்வித்துறை ஆகியவற்றில் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பட்டறிவைப் பெற்றுக்கொண்டார். நீதி பரிபாலனம், சிறைச்சாலை நிர்வாகம், கல்வி நிர்வாகம் ஆகிய துறைகளில் இவர் பெற்றுக்கொண்ட அனுபவம், பொது வாழ்வில் இவர் மேற்கொண்ட தொண்டுகளைத் திறம்படச் செய்து முடிப்பதற்கு வேண்டிய அறிவையும் அனுபவத்தையும் இவருக்குக் கொடுத்தது.

மேலும் இவர் இலங்கையின் பலபாகங்களிலும் பணியாற்றியதன் காரணமாக மூவின மக்களோடும் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். சாதாரண மக்கள் முதல் உயர் கல்வி கற்றோர்வரை, சமூகத்தின் சகல தரப்பினரோடும் தொடர்பு கொள்ளும் பேறினைப் பற்றிருந்தார். நீதிபதிகள், நியாயவாதிகள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலரோடும் இவர் கொண்ட தொடர்பு இவரது ஆளுமை விருத்திக்குப் பெரிதும் உதவியது.

நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலை நிர்வாம் என்பவற்றோடு இவர் கொண்ட தொடர்பின் காரணமாக நீதி, நியாயம் பற்றிய இவரது அறிவு வளர வாய்ப்பேற்பட்டது. அத்தோடு, மனநிலையில் மனிதர் குற்றம் புரிகின்றனர் என்பதையும் அறிய வாய்ப்புக் கிடைத்தது. மேலும், குற்றவாளிகள் எனக் கருதப்படுவோர் தம் வாழ்வின் மறுபக்கத்தையும் பார்ப்பதற்கான வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது. இவை, இவரது பார்வையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இவரது படைப்புக்களில் மனிதரைச் சரியான பாத்திரங்களாகப் படைக்க இவ்வனுபவங்கள் பெரிதும் உதவின.

கல்வித் திணைக்களத்தோடு இவர் தொழில்ரீதியாகக் கொண்டிருந்த தொடர்பு, கல்வி பற்றிய தெளிவினை இவருக்கு ஏற்படுத்தியோடு, ஓய்வின் பின்னர் ஆசிரியத்தொழிலை விருப்பொடு மட்டுமல்லாது திறம்படவும் செய்ய உறுதுணையாயிற்று. பசுபதி மிகச் சிறந்ததொரு ஆங்கில ஆசிரியராகவும் இருந்து வந்தார் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும். இறுதி மூச்சுவரை அவர் கற்பித்தலில் ஈடுபட்டு வந்தார். அதுமட்டுமல்லாது, சிறுவர் இல்லச் சிறுவரோடும் உறவாடி வந்தார். இவரது பரந்த அறிவும், பலலோடு பழகும் பாங்கும், இயல்பினுள் கிடந்த நகைச்சுவை உணர்வும், இவரை மாணவர் விரும்பும் ஆசானாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுபதி அவர்கள் கவலைகள், பெருந்துயர்கள் எனக் கண்டிருக்கிறார், ஆயினும் கவலையை அவர் ஒருபோதும் வெளிக்காட்டியதில்லை.

பசுபதி அவர்களது தொழில் சார்ந்த வாழ்வினைப் பின்வருமாறு தொகுத்தமைத்துக் கொள்ளலாம்.

1. 1958 –1963 – எழுதுவினைஞர் – நீதிமன்றம் –மாத்தறை,பாணந்துறை
2. 1963 – 1965– எழுது வினைஞர்– நீதிமன்றம் – பதுளை
3. 1965 – 1970– எழுது வினைஞர்– நீதிமன்றம் – அனுராதபுரம்
4. 1970 – 1974– எழுது வினைஞர்– நீதிமன்றம் – மட்டக்களப்பு
5. 1974 – 1978– முதலியார் – நீதிமன்றம் – யாழ்ப்பாணம்
6. 1978 – 1982– – சிறைச்சாலைத் தலைமையகம் – கொழும்பு
7. 1982 – 1988– – கல்வித்திணைக்களம்–யாழ்ப்பாணம்
8. 1988 – 1990– பதிற்கணக்காளர் – கல்வித்திணைக்களம்– முல்லைத்தீவு
9. 1990 – – நிதி உதவியாளர் – கல்வித்திணைக்களம் – வேலணை
10. 1990 – – சேவையிலிருந்து ஓய்வு பெறுதல்.

பசுபதி தனது 28 வது வயதில் "மங்கலம்" எனும் மனைமாட்சியுள் காலடிவைத்தார். திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த தம்பிஜயா – அமிர்தாம்பிகை தம்பதியினரின் மகளான வில்வராணியை 1963 ஆம் ஆண்டு இவர் திருமணம் செய்து கொண்டார். வில்வராணி "வில்வம்" எனவே பெற்றோர் சகோதர்களாலும் உற்றார் உறவினர்களாலும் ஊரவர், நண்பர்களாலும் அழைக்கப்பட்டு வருகிறார். பசுபதி அவர்கள் "வில்வம் பசுபதி" எனும் புனைபெயரிலேயே தனது இலக்கிய ஆக்கங்களைப் படைத்தார். இத்தம்பதியினரிடையே இருந்த உறவு நெருக்கத்தைக் காட்டுவதாக இப்புனை பெயர் அமைந்துள்ளது. மேலும், வீட்டுப்பெயரொன்று புனைபெயராகி நாட்டின் பொதுவுடைமையாயிற்று.

மங்கலம் மனைமாட்சியின் நன்கலமாக, பசுபதி வில்வராணி தம்பதியினர் நான்கு நன்மக்களைப் பெற்றெடுத்தனர். தலைமகனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலகுமரன் 1964 ஆம் ஆண்டிலும், இரண்டாவது மகவாக பாலரஞ்சன் 1965 ஆம் ஆண்டிலும், மூன்றாவது மைந்தனாக பாலமுரளிதரன் 1967 ஆம் ஆண்டிலும், கடைக்குட்டியான பாலமுகுந்தன் 1969 ஆம் ஆண்டிலும் வந்து பிறந்து பசுபதி – வில்வராணி குடும்பத்தை அலங்கரித்தனர். இவர்கள் நால்வரும் முறையே "மோகன்", "ரஞ்சன்", "முரளி", "முகுந்தன்" எனப் பெற்றோராலும் மற்றோராலும் அழைக்கப்பட்டு வருகின்றனர். இன்னவாறு இவர்களை அன்போடு அழைத்து வந்த பசுபதி, இறைவன் அழைப்பை ஏற்று, இவர்களை ஏங்கவிட்டுச் சென்றுவிட்டார்.

மூத்தமகன் பாலகுமரன் (மோகன்) யா/இந்துக்கல்லூரியில் கல்வி கற்று, இன்று "மோகன் மாஸ்டர்" என்ற பெயரோடு, மாணவர், பெற்றோர் மத்தியில் மிகுந்த மதிப்பினைப் பெற்றுக்கொண்டிருக்கும் கணித ஆசிரியராகச் சிறப்புறப் பணியாற்றி வருகிறார். மோகன் யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றி வந்த சரவணமுத்து – செல்லம்மா தம்பதியினரின் மகள் ரஞ்சினிதேவியை 1997 ஆம் ஆண்டு திருமணம் புரிந்து கொண்டார். துரதிஷ்ட வசமாக வாகன விபத்தொன்றிற் சிக்கிய ரஞ்சினிதேவி 09-05-2004 இல் அகாலமரணமடைந்தார். இந்நிகழ்வு, இன்புற்றிருந்த பசுபதி குடும்பத்தில் முதன் முதலாக வந்துற்ற துயர்மிகு மொன்றாக அமைந்துவிட்டது. யார் தான் என்செய முடியும்?! "நெருநல் உளன், ஒருவன்: இன்றில்லை! எனும், பெருமை உடைத்து, இவ்வுலகு", எனும் வள்ளுவன் வாக்கைக் கற்றறிவாகக் கொண்டு, இதனைப் பட்டறிவாக்கிக் கொள்வோம். வாழ்க்கைப் பயணத்தில் நாம் தேறவேண்டி- மனந்தேறவேண்டி இருக்கும் சோதனைகள் தான் எத்தனை! பசுபதி இதில் தேறினாரா? உள்ளத்தின் அடிமடையில் இச்சோகத்தைக் கிடத்திவிட்டு, "வெளிமடையில்" மற்றவர்களைத் தேற்றினாரா? அவர் செயலை அவனன்றி யாரறிவார்!

பசுபதி – வில்வராணி தம்பதியினரின் இரண்டாவது மகன் பாலரஞ்சன் (ரஞ்சன்) யா/மத்திய கல்லூரியில் கல்வி கற்று இன்று கணக்காய்வு உதவியாளராகப் பணியாற்றி வருகிறார். இவர் 1995 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்முகநாதன் – இந்திராணி தம்பதியினரின் மகள் ஜெயந்தியைத் திருமணம் செய்து, மணபந்தத்தின் இனிய பேறாக சதுர்சன் எனும் மகனைப் பெற்று இனிதே வாழ்ந்து வருகிறார்.

பசுபதி குடும்பத்தின் மூன்றாவது மகன் பாலமுரளிதரன் (முரளி) யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று, இன்று யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் 2000ஆம் ஆண்டு நற்குணசிங்கம் பேரின்பநாயகி தம்பதியினரின் மகள் காயத்திரியைத் திருமணம் புரிந்து கொண்டு இனிதே வாழ்ந்து வருகிறார். காயத்திரி யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவ்விளம் தம்பதியினர் ஆதிரையன், ஆரூரன் என இரு மக்களைப் பெற்றெடுத்துள்ளனர்.

பசுபதி தம்பதியினரின் கடைசி மகன் பாலமுகுந்தன் (முகுந்தன்) யா/இந்துக்கல்லூரியில் பயின்று, முன்னம் முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் தொழில்நுட்ப அலுவலராகப் பணிபுரிந்து விட்டு, இப்பொழுது யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் 2006ஆம் ஆண்டு சந்திரசேகரம் – கமலாதேவி தம்பதியினரின் புதல்வி சசிகலாவைத் திருமணம் செய்து கொண்டார். சசிகலா யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறார்.

பிள்ளைகளுக்குரிய கடமைகள் யாவற்றையும் நிறைவுறச் செய்து விட்டோம் என்ற மனநிறைவு காரணமாகவோ என்னவோ, பசுபதி கடைசி மகனின் திருமணத்தையும் சிறப்புற நிகழ்த்திப் பார்த்து விட்டு, இறைவன் பாதநிழலின் நிறைவு நாடிச் சென்றுவிட்டார் போலும். பசுபதி உளங்கொளப் பரமன் வகுத்தமைத்தனன் போலும்.

பொதுவாழ்வைப் பொறுத்தவரையில் பசுபதி "பலசோலிக்காரன்" எனக் கொள்ளுமாறு வாழ்ந்தார். சிறுவர் நலன், வரியிறுப்பாளர் நலன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிக்கனக்கடன் நலன், கிராமிய அபிவிருத்தி, கூட்டுறவியக்கம், ஆலய பரிபாலனம், பத்திரிகைத்துறை, படைப்பாக்கத்துறை எனப் பலதிலும் பற்றோடு ஈடுபட்டு உழைத்து வந்தார். அன்னவர், பற்றோடு உழைத்து வந்த துறைகளுள் சிலவற்றைத் தொகுத்துப் பார்ப்பதானால், பின்வருவன வற்றையேனும் நாம் குறித்துக் கொள்வது அவசியமாகும்.

1. தலைவர் – நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
2. செயலர் – திருநெல்வேலி கலாமன்றம்
3. செயலர் – வரியிறுப்பாளர் நலன்புரிச்சங்கம்
4. செயலர் – கிராமிய அபிவிருத்திச் சங்கம்
5. செயலர் – சிவகாமி அம்மன் தேவஸ்தானம் – திருநெல்வேலி
6. செயலர் – சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர் இல்லம்
7. பிரதம ஆசிரியர் – முரசொலி பத்திரிகை

இத்தனை பணிகளுக்கும் மத்தியில், பசுபதி ஆர்வம் மிக்கதொரு படைப்பாளியாகவும் இருந்து வந்தார். சிறுகதை, குட்டிக்கதை, நகைச்சுவைக் கதை, கட்டுரை, ஆத்மீகக் கட்டுரை எனப்பலவற்றையும் "வில்வம் பசுபதி" எனும் புனைபெயரில் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு எழுதி வந்தார். அத்தகைய இவரது ஆக்கங்கள் "சஞ்சீவி", "ஞானக்கதிர்" போன்றவற்றிலும், வேறு வெளியீடுகளிலும் வெளிவந்துள்ளன. இப்படைப்புக்கள் யாவும் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் வெளிவருவது அவசியம்.

பசுபதி அவர்கள் தன்னுள் வளர்த்திருந்த நல்லவற்றுள் ஒன்றாக அவரது வாசிப்புப்பழக்கம் அமைந்தது. "தீராப்பெரும் பசிகொண்ட வாசகன்" என அவரைக் குறிப்பிடுதல் சாலப்பொருந்தும். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் அவருக்கிருந்த புலமை மற்றும் பற்றுக் காரணமாக அவர் தினமும் நிறையவே வாசித்தார். புத்தகம் என்று ஒன்றைக் கண்டால் அதை முற்றற வாசியாது விடமாட்டார். இவரது மறைவால் பல நூல்நிலையங்கள் தமது மிக முக்கியாமனதொரு "வாடிக்கையாளரை" இழந்துள்ளன. நம்மத்தியில் வறிதாகிக் கிடக்கும் வாசகர் வட்டம், இவரது மறைவால் மேலும் வறுமைப்பட்டுக்கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக் கல்வியாலும், தொழில் மூலம் கிடைத்த அனுபவக் கல்வியாலும், வாசிப்பால் கிடைத்த பரந்த அறிவாலும், சமய, சமூகத் தொண்டுகளால் பெறப்பட்ட பட்டறிவாலும், சுயமாக அவரிடம் இருந்த ஹாசிய உணர்வாலும் சுப்பிரமணியம் பசுபதி அவர்கள் சிறந்த ஆளுமை கொண்டதொரு மனிதராக வாழ்ந்து, தனது பணிக்கடன் முடித்து, பாசம் நீக்கி, பசுக்களின் பதியாம் பரமேஸ்வரன் திருவடியினைத் தன் தலைமீது சூடிக்கொண்டு விட்டார். அன்னவர் வாழ்வு எமக்கு நல்வழிகாட்டி எனக்கொண்டு, இனிவருங்காலம் மானுடம் பயனுற வாழ்வாமாக. இதற்கு, இறையோடு இரண்டறக் கலந்திருக்கும் பசுபதியின் ஆசி என்றும் எமக்குக் கிட்டும்.

"மெய்யே!
உன் பொன் அடிகள் கண்டு,
இன்று,
வீடுற்றேன்."
– (சிவபுராணம் – திருவாசகம்)

**அய்யாவை நன்கு அறிந்த**
**குழந்தை ம. சண்முகலிங்கம்**

உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால், எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கக்கூடாது, உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றை பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ, மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனை பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

**– சுவாமி விவேகானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மறக்க முடியாதவர்

எமது வாழ்க்கைப் பயணத்தில் பலரையும் நாம் சந்தித்துக் கொண்டிருப்பினும் எல்லோருமே மனதில் இடம் பிடிப்பதில்லை. மனதை விட்டு நீங்காதவர்கள் ஒரு சிலரே. அந்தவகையில் அன்றொருநாள் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் முதல் முறையாக அமரர் சுப்பிரமணியம் பசுபதி அவர்களைச் சந்தித்தேன். கூட்டுறவு மூலம் ஆரம்பமாகிய எங்கள் நட்பு வளர்ந்து இறுக்கமடைந்து சைவ வித்தியா விருத்திச் சங்கம் வரை நீண்டு சென்றது.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு.

அவரின் உறவால், இவ்வாழமான குறட்பபாவின் பொருளுணர்ந்தேன்.

சில ஆண்டுகள் தான் என்றாலும் அகமனதால் மிகக் குழைந்த சகபாடிச் சோதரராய் வாழ்ந்து விட்டோம்.

கனிவான பேச்சு, துணிவும் தூய்மையும் கொண்ட பணி, தன்னலமில்லாத தொண்டு இவை தான் அமரர் பசுபதி அவர்களின் தோற்றம்.

அரசாங்க சேவையிலும் சரி, சமூக, ஆன்மீக சேவையிலும் சரி பல பதவிகளை வகித்த போது, பதவியை அலங்கரிப்பவர்கள் பதவியால் அலங்கரிக்கப்படுபவரை விட ஒருபடி மேலானவர்கள் என்பதை தெளிவாகக் காட்டிய இனிய நண்பர்.

"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கூற்றுக்கமைய வாழ்ந்து காட்டிய பண்பாளனை இழந்து தவிக்கும் அவர் குடும்பமும் நாமும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**- நா. நித்தியானந்தன்**
**சமாதான நீதிவான்.**

பொற்பதி வீதி,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பமுடியாத இழப்பு

அமரர் சுப்பிரமணியம் பசுபதி காலமாகிவிட்டார் என்பதை இன்றும் நம்பமுடியாமலுள்ளது. வெற்றிலை போடுவதாலே என்றும் சிவந்த வாயிலே எப்பொழுதும் புன்னகை தவழும். என்னைக் காணும் போதெல்லாம் இந்தப் புன்னகையை நான் காணத் தவறுவதில்லை. ஈருருளியிலே நிமிர்ந்த தோற்றத்துடனே அவர் செல்லும் காட்சியைக் கண்டவர்கள் அவருடைய சரியான வயதினை கூறமுடியாமலிருப்பர். இது திரு. பசுபதி தொடர்பாக நான் வியப்படைந்த ஒரு விடயம்.

நான்கு சிறப்பான ஆண்மக்களைப் பெற்றுத் தந்தையாகவும் பேரனாகவும் பெருவாழ்வு வாழ்ந்து அவர் சென்றுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளாக சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயலாளராகப் பணிசெய்யும் போது பெருந்தொகையான நிறைவாழ்வு வேண்டிநிற்கும் பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் பேரனாகவும் இருந்து பெருந்தொண்டாற்றிச் சென்றுள்ளார். "துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே" என்னும் சம்பந்தப் பெருமானுடைய தேவார அடி நினைவுக்கு வருகின்றது. சாவிலும் நல்ல சாவு பற்றி நாம் பேசுவதுண்டு. திரு. பசுபதி துன்பமடையாமல் அவருடைய இன்னுயிர் நீங்கி உள்ளது. இதற்குக் காரணம் அவர் செய்த தொண்டுப்பணியாகும். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தில் தொண்டுப்பணி செய்பவருக்குத் துன்பம் வராது.

சைவ விருத்திச் சங்கத்தின் பிள்ளைகளுடன் 1995இல் நாம் இடம்பெயர்ந்தோம். தென்மராட்சியில் தங்கியிருந்தபோது பிள்ளைகள் தொடர்பான முடிவுகள் எடுப்பதற்குக் கூட்டம் கூடியபோது திரு. பசுபதி தவறாமல் அக்கூட்டத்திலே பங்குபற்றி மேலான ஆலோசனைகளை வழங்கிய நிகழ்வு இன்னும் என் மனத்தில் பசுமையாகவுள்ளது. திரு சோ. பத்மநாதனும் அக்கூட்டத்திலே பங்குபற்றினார்கள்.

பல்வேறு துறைகளிலே திரு. பசுபதிக்கு ஈடுபாடு இருந்தமையை அவருடன் பத்து ஆண்டுகள் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பணியாற்றிபோது அவதானிக்கக்கூடியதாயிருந்தது. நல்லவற்றை நயமாக உரைப்பதற்கும் அல்லவற்றைச் சாடவும் வல்லவர். இது என் அனுபவத்தில் கண்ட அவருடைய இயல்பு.

நல்லவர் வல்லவர் எல்லோரையுமே சாவு ஒரு நாள் பற்றிக்கொள்ளும். இது உல நியதி. இந்த இயல்பினை திரு. பசுபதியினை இழந்து நிற்கும் அவருடைய அன்புத் துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் யாவரும் உணர்ந்து கொண்டால் துன்பம் நீங்கும். அமரர் பசுபதி சிவகாமி உடனுறை ஆடவல்லானுடைய தாமரைத் தாள்களிலே அமைதியுற்று விளங்குவார் என்பதிலே ஐயமில்லை.

**– பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

## மனித தர்மம்

ஏழ்மையிலும் - நேர்மை
கோபத்திலும் - பொறுமை
தோல்வியிலும் - விடாமுயற்சி
தரித்திரத்திலும் - பரோபகாரம்
துன்பத்திலும் - தைரியம்
செல்வத்திலும் - எளிமை
பதவியிலும் - பண்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் இனிய நண்பன் "பசுபதி"

கலியுகத்தில் நல்லதைக் காண்பது அரிது. நல்லவற்றைச் செப்பவர்களும் அரிது இருந்த போதிலும், அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒரு சிலர் நல்லவற்றைச் செய்து கொண்டு தானிருக்கின்றார்கள். இருந்த போதிலும் எல்லோரும் எம்மனதில் நிலைத்து நிற்பதில்லை. அவர்களுள் ஒரு சிலரே எம் நெஞ்சில் நீங்காது நிலைத்து நிற்பர். இந்த வரிசையில் என் நண்பராகவும், கல்லூரித் தோழனாகவும் திகழ்ந்தவர் அண்மையில் மறைந்த மறக்க முடியா திரு. பசுபதி அவர்கள்.

எந்நேரமும் தனது மாறாத புன்னகையுடனும், நேசவுணர்வுடனும் நகைச்சுவையுடனும் கலந்துரையாடும் பண்புடன் காட்சி தருகின்ற திரு.பசுபதி அவர்கள் இறைபதம் அடைந்தார் என்ற துயரச் செய்தியை தொலைபேசி மூலம் கேட்டவுடன் என்னால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. அதிர்ச்சி அடைந்தேன். அப்பொழுது தான் எனக்கு

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

என்ற வள்ளுவனின் குறள் ஞாபகத்திற்கு வந்தது. சற்று ஆறுதல் அடைந்தேன்.

தனது குடும்பத்திற்கு சிறந்த தலைவனாகவும், நண்பர்களுக்குமிக்க இனியவராகவும், சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயற்பாட்டு வீரனாகவும், அம்பாள் ஆலயத் தொண்டனாகவும் அடியவனாகவும் எல்ரோரின் மதிப்பிற்கும் அபிமானத்திற்கும் உரியவராகத் திகழ்ந்த திரு. பசுபதி அவர்களின் கல்லூரி நாட்களில் அவர் என்னுடன் கழித்த நாட்களை மீட்டுப் பார்க்கின்றேன்.

1955ம் ஆண்டு என நினைக்கின்றேன் நண்பன் பசுபதி அவர்கள் கொக்குவிலிருந்து தனது துவிச்சக்கரவண்டியில் கூடையில் புத்தகங்களை சுமந்து நேர்த்தியான ஆடையணிந்து ஆஜானுபாகு தோற்றமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வகுப்பறையில் நுழையும் காட்சியை நினைத்துப் பார்க்கின்றேன். வகுப்பறையில் மிகவும் அமைதியான பையன். எங்கள் வகுப்பில் வாட்ட சாட்டமான மாணவனும் அவர் தான், உயர்தர மாணவர் மன்ற உப தலைவராகவும் தெரிவு செய்யப் பட்டார். அன்று அரசியலில் முக்கிய விடயமாகவும் எமது அரசியல் பாட வகுப்பிற்கும் தேவையாயிருந்த. சமஸ்டி ஆட்சி முறை இலங்கைக்கு உகந்ததா? என்ற விவாதத்திற்கு ஏற்பாடு செய்து அப்போது அரசியலில் எதிரும் புதிருமாக இருந்த கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தையும் பொதுவுடமைக் கட்சிப் பிரமுகர் திரு. அ. வைத்தியலிங்கம் அவர்களையும் இரு அணிகளுக்கும் பேசும் மாணவர்களுக்கு ஆதரவாக உரையாற்றுமாறு மிகுந்த பிரார்த்தனை யங்களுக்கு மத்தியில் அரங்கேற்றினேன். அப்பொழுது வன்னியசிங்கம் அணியில் திரு. பசுபதி அவர்கள் சான்றுகளுடன் சமஸ்டியை ஆதரித்து ஆற்றி உரை எல்லோர் மனதையும் கவர்ந்தது. அன்று எதிரணியைச் சேர்ந்த திரு. அ. வைத்திலிங்கம் கூட Mr. Pasupathy has a Bright Future என்று புகழ்ந்து கூறியது அன்னாரின் புலமைக்கு சான்று பகருகின்றது.

வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்களுக்கென "மாணவர் தீபம் என்ற சஞ்சிகைக்கு யான் ஆசிரியராகக் கடமையாற்றியபோது அந்நேரமும் திரு. பசுபதி அவர்கள் "கண்ணீர் என்ற சிறுகதை எழுதியது ஞாபகத்திற்கு வருகின்றது. அதனை வாசித்த எமது தமிழ் ஆசான் – அண்மையில் மறைந்த திரு. அ. சரவணமுத்து அவர்கள் அதனைப் பாராட்டி அவரின் எழுத்தார்வத்தை ஊக்குவித்தார் எனில் மிகையாகாது.

இத்தகைய சிறப்புத் தகமைகள் கொண்டு விளங்கிய திரு. பசுபதி அவர்கள் தனது கல்வியினைத் தொடர்ந்திருந்தால் பல்கலைக்கழகம் சென்று பல உயர்பதவிகளை அணிசெய்திருப்பார். ஆனால் அரசாங்க எழுதுவினைஞர் சேவை பரீட்சையில் சித்தியெய்தியதனின் காரணமாக தொழில் வாய்ப்பினைப் பெற்றுப் பல்துறைகளிலும் கடமையாற்றி ஈற்றில் யாழ்கல்வித்திணைக்களத்தில் நிதி உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்றவர். ஓய்வு எடுக்காமல் பல சமூகத் தொண்டுகளில் தன்னை ஈடுபடுத்தி சமூகத் தொண்டிற்கே இலக்கணமாகத் திகழ்ந்தார். அது மட்டுமல்ல ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாணவர்களுக்கு ஆங்கில கல்வி போதித்து நன்மதிப்பையும் பெற்றார். சைவ வித்தியாவிருத்திச் சங்க வரலாற்றையும் அதனை ஆவணப்படுத்தி வைக்க வேண்டிய நன்நோக்கில் இவ்வாண்டு ஒரு மலர் வெளியிடுவதற்கு ஆவல் கொண்டிருந்தமையும் யாம் அறிவோம். ஆகவே அவரின் கனவுகளை நனவாக்குவதே நாம் செய்யும் கைமாறாகும்.

நீத்தாரை நினைவு கூரும் போது, ஆன்மா அழியாதது
நிலையானது என்றும் உள்ளது என்ற பேருண்மையை
அறிந்து ஆறுதல் அடைதல் வேண்டும்!

*புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு*
*இரந்து கோள் தக்கது உடைத்து*

- குறள்

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவுகள், யாவருக்கும் எமது இதயபூர்வமான அனுதாபங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நண்பன்**

**வி. ஸ்ரீசக்திவேல்**

(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்.
வடக்கு அரச சார்பற்ற நிறுவன தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்
# The Hindu Board Of Education

Incorporated By Ord.No:23 Cap: 343 of 1926 - Approved Charity Gazette No: 1085704 / 11/ 1955

*கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.*

*Kalasalai Road, Thirunelvely, Jaffna, Sri Lanka.*


ஆளுநர் சபை
**Board of Management**

**தலைவர் / President**
திரு.அ.தற்பரானந்தன்
Mr. A Dhatparanandhan

**உபதலைவர் / Vice Presidents**
திரு.சோ.பத்மநாதன்
திரு.ஆறு.திருமுருகன்
Mr.S.Pathmanathan.
Mr.Aru.Thirumurugan

**செயலாளர் / Secretary**
திரு.சு.பசுபதி
Mr.S.Pasupathy

**உபசெயலாளர் /Asst.Secretary**
வைத்திய கலாநிதி வி.வேதநாதன்
Dr.V.Vethanathan

**நிதிச் செயலாளர்**
**Financial Secretary**
கலாநிதி ம.சண்முகதாஸ்
Dr.(Mrs) M.Sanmugadas.

**திட்டப் பணிப்பாளர்கள்**
**Project Directors**

**இல்லம் / Home**
திருமதி .கௌ.இராஜேந்திரபிரசாத்
Mrs.G.Rajendrapresad

**கல்வி / Education**
திரு.வி.ஸ்ரீசக்திவேல்
Mr.R.Srisakthivel

**சமயம் / Religion**
திரு.இ.குகதாசன்
Mr.K.Kugathasan

**பயிற்சி / Training**
திரு.பொ.அரவிந்தன்
Mr.P.Aravinthan

**பண்ணை/ Farm**
திரு.க.செ.துரைரட்ணம்
Mr.K.S. Thurairatnam.

**மருத்துவம் / Health**
வைத்திய கலாநிதி சு.சந்திரசேகரா
Dr.S.Shandrasegara


11-09-2006

திருமதி வி.பசுபதி
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

## அமரர் சு. பசுபதிக்கு அஞ்சலி

அன்புடையீர்!

கடந்த 07-09-2006 இல் கூடிய எமது பணிப்பாளர் சபை தங்கள் கணவர் சங்கத்துக்கு - குறிப்பாக இல்லத்துக்கு ஆற்றிய அரும் பணியை நன்றியுடன் நினைவு கூர்ந்தது. அவர் ஆத்மசாந்திக்காக இரு நிமிட மௌனப் பிரார்த்தனையும் செய்தது.

செயலாளராகப் பொறுப்பேற்று, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எமது இல்லப்பிள்ளைகளின் நலனுக்காக அமரர் பசுபதி அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டார். ஆன்மீக விழாக்களை ஏற்பாடு செய்வதிலும் பஜனையில் பங்குபற்றும் பிள்ளைகளைப் பயிற்றுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

அற்புதமான ஒரு துணைவரை இழந்து நிற்கும் தங்களுக்கும் நல்லதொரு வழிகாட்டியை இழந்து நிற்கும் தங்கள் பிள்ளைகள், மருகியர், பேரப்பிள்ளைகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[signature]

செயலாளர்.
SECRETARY
**Board of Education**

**- சோ. பத்மநாதன்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# ஆற்றல் கண்டு ஏற்றம் தந்தாய்!

சைவ வித்தியா விருத்திச் சங்க விடியலுக்காக
மெய் வருத்தம் பாராது
சேவையாற்றிய ஐயாவே! – உங்களின்
கனிவான பேச்சும்
களங்கமில்லா மனதும்
இல்ல வளர்ச்சியில் அயராத உழைப்பும்
சிறார்களின் நலமதில் நீடித்த சேவையும்
கண்காணிப்பில், கட்டுப்பாட்டில்
கருத்தூன்றலும்
கண்டு வணங்கி நின்றோம்
சிறுவருள்ளே புதைந்த பொக்கிஷமாம் ஆற்றலை
உலகறிய வெளிப்படுத்தி
அறிவுக்கு அத்திவாரமிட்ட
ஆன்றாரே
கண்ணியம் மிக்கவரே ஏணிப்படியாய் எமக்கு
ஏற்றம் தந்த மேலோய்
அறிவே நிறைவாகிய
பண்பாளரே! – பசுபதி ஐயா!
தங்களின் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
அன்புச் சிறுவர் நாம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**- செல்வி சி. லக்ஷ்மி**
(மாணவி, சைவ வி.வி.சங்க இல்லம்)

இறுதிக் கிரியைகளின் போது வாசிக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தேறுதல் இல்லை ஐயா!

அன்பே ஊற்றாகி
அறிவே துணையாகி
அமைதியே உருவாகி
கடமையே கண்ணாகி
பண்பே சிகரமாகி
பேச்சே செயலாகி
மூச்சே சேவையாகி
முழுமை பெற்ற எங்கள்
செயலாளர் ஐயாவை
தேடித் தவிர்க்கின்றோம்.
தேறுதல் இல்லை ஐயா
நேற்றிருந்தார் இன்றில்லை
என்னும் பெருமை உடைய
உலகில் நாமும் ஒருவர்
என்ற உணர்வில் அமைதி அடைவோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**- திருமதி கு. நடனேஸ்வரி**
(சைவ வித்தியா விருத்திச் சங்க
உப விடுதிக்காப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அற்புதமான மனிதர்

அமரர் பசுபதியை யாழ் கல்வித்திணைக்களத்தின் நிதி உதவியாளராக முன்பே அறிந்திருந்தாலும், அவரோடு நான் நெருங்கிப் பழகியது நல்லூர் ப.நோ.கூ.சங்க நெறியாளர் குழுவில் இருவரும் பணியாற்றிய காலத்திலாகும், இத்தொடர்பு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் தோளோடு தோள்நின்று பணியாற்றிய பன்னிரெண்டு வருட காலத்தில் வலுப்பெற்றது. அரசசேவையில் ஒத்த பின்புலமும், எழுத்துத்துறை ஈடுபாடும் எமது நெருக்கத்துக்கு உதவின. இவற்றுக்கு அப்பால், நாம் இருவரும் பக்கத்துக் குறிச்சிகளில் பிறந்தவர்கள் என்பது அண்மைக்காலத்தில் அறிந்து மகிழ்ந்த – வியந்த செய்திகள்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கச் செயலாளராக, பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகாலம் அவர் செய்த சேவை மகத்தானது, மறக்க வொண்ணாதது. தமது பழுத்த அநுபவமூலம் விஷயங்களை அணுகி, தீர்வுகளைக் காணும் ஆற்றல் அவருக்கிருந்தது. சைவச் சிறுவர் இல்லத்துப் பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர பல திட்டங்களைத் தீட்டினார். தாமே முன்னின்று பஜனை நடத்தினார். பிள்ளைகளைப் பயிற்றினார். கடந்த மாதம் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபொழுது, துரிதமாகச் செயற்பட்டு, இல்லத்துக்குத் தேவையான உணவுப் பண்டங்களைச் சேகரித்து, தளப்பம் நேராது பார்த்துக் கொண்டார்.

அமரர் பசுபதியின் சிறப்பியல்பு அவருடைய நகைச்சுவையுணர்வு. பாரதூரமான – சூடான – விவாதங்களையும் தமது நகைச்சுவையால் திசை திருப்பி, அமுகமான சூழலை ஏற்படுத்துவதில் வல்லவர் அவர்.

நிறைவாழ்வு வாழ்ந்த இப்பெருமகனை, பாயிற்கிடவாமல் தன் பாதாரவிந்தத்துக்கு இறைவன் அழைத்துக் கொண்டான். அற்புதமானதோர் குடும்பத் தலைவனை இழந்து தவிக்கும் மனைவி, மக்கள், மருகியர், பேரப்பிள்ளைகள் அனைவர்க்கும் எம் அநுதாபம் உரியது.

அமரர் ஆத்மா சாந்தி பெறுக!

**– சோ. பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உ
*ஓம் ஸ்ரீ சாயிராம்*

# அமரர் சுப்பிரமணியம் பசுபதி அவர்கள்
# எம் ஆத்மீக உறவு

ஏழு தசாப்தங்களாக இப்பிரபஞ்சத்திலே தோன்றி பசுபதி எனும் நாமத்துடன் வாழ்வாங்கு வாழ்ந்து செயற்கரிய சேவைகள் ஆற்றி மனிதருள் மாணிக்கமாக தம்முள் உறையும் தெய்வீகத்தை சாதனை மூலம் வெளிப்படுத்தி, புவிப்பயணத்தினை 2006-08-26 அன்று நிறைவு செய்துள்ளமை, யோகிகளினால் கூட சாத்தியப்படுத்த முடியாத பேற்றினை அமரர் அவர்களின் திடீர் இயற்கை எய்திய நிலையால் ஐயத்திற்கிடமின்றி சாட்சியாகின்றது.

முதன் முறையாக 1957ஃ58 காலப்பகுதியில் கடமைகளுக்காக தென் இலங்கை மாத்தறை நகரில் ஒன்று கூடிய இருபதுகளைக் கொண்ட இளைஞர் குழுவில் நீதித்துறை, வங்கி மற்றும் அரச சேவையைச் சேர்ந்த யாழ்ப்பாண மைந்தர்கள், ஓய்வு நேரங்களில் மாத்தறை கடற்கரையோரம் ஒன்றும் கூடியபோது அமரர் பசுபதி அவர்களின் உறவு ஆரம்பமானது, கதிர்காம யாத்திரிகர்கள் தொடருந்து முடிவுற்று பேரூந்து மூலம் பயணம் தொடரும் முன் தங்கிச் செல்ல மடம் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அதனுடன் இணைந்து, பிரார்த்தனை, பஜனை யோகப்பயிற்சி என்பவற்றில் சாதனை செய்தும் கதிர்காம உற்சவ காலத்தில் அன்னதானம், பிரயாண ஒழுங்குகளுக்கும் உதவி தவப்பொழுதாக ஓய்வு நேரங்களை கழித்தோம், மாதம் ஒரு தடவையேனும், கதிர்காமம் சென்று வரும் திருவருளும் கூடியது. பஜனை செய்வதில் முன்னோடியான அமரர் பசுபதி அவர்கள் உற்சவகாலத்தில் அமரர் ஆத்மஜோதி முத்தையா ஆசிரியர் அவர்களுடன் இணைந்து கூட்டுப் பஜனை செய்வோம். இதன் பேறாக இலங்கையில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட 1958 ஆகஸ்ட் இனக்கலவரத்தின்போது இறையருளால் எம் குழுவினருக்கு பாதிப்பு எதுவும் நிகழாது பாதுகாக்கப்பட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கூட்டுறவாளன்:-**

அமரரின் சேவைகள் நீதித்துறை, கல்வித்துறையூடாகத் தொடரவும் அடியேன் கூட்டுறவுத்துறை மூலம் கிழக்கிலங்கையில் இரு தசாப்தங்கள் தொடர்ச்சியாக ஆற்றிய பின் யாழ்ப்பாணத்தில் 80 பதுகளிலே நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவனாக, மக்கள் பணிபுரிந்து அல்லல்படுவோருக்கு ஆதரவு வழங்கும் சேவையின் போது ஒன்றுகூடி அளவளாவி அன்புறவினை தொடரவைத்தமை அவருள் உறை தெய்வீக மகிமையாகும். கூட்டுறவில் இனமொழி, நிற மத நிலைகளைக் கடந்து மக்கட் சேவை ஆற்ற உதவும் தெய்வீக தலைமையேற்று நற்பணிபுரிய அவரால் முடிந்தது.

**சாயி சேவை:-**

1996 இல் மீள் குடியமர்வின் பின் காலத்திற்கேற்ற தன் நற்பணிகள், ஆத்மீகசாதனையூடாக முன்னெடுக்கப்பட்டது. கலியுக அவதாரம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சேவா நிலைய வாராந்த பஜனைகளின் போது அமரரின் உறவு மீளவும் நெருக்கமாக் கிட்டியது. 1998 - 2000 ஆண்டுகளில் சுவாமியின் சேவைப் பணிகளைத் தொடர யாழ்ப்பாண நிலையத்தின் தலைவனாக ஆக்கிய அற்புத நிகழ்வோடு அமரர்.

பசுபதி அவர்கள் சாயி பஜனையில் ஒழுங்காக பங்கு கொண்டு பாடகர் குழுவில் இராகம் தாளம் பாவம் சரிவரப் பெற்ற பாடகனாகவும் நிலைய பிரார்த்தனையின் பின் பகவானின் போதனைகளை சாயிபக்தர்களுக்கு எடுத்தியம்பும் நற்பேற்றினையும் பெற்றுக்கொண்டார். பகவான் கூறும் ஒழுக்க நெறிகளை பிறப்பிலிருந்தே சரிவரப் பின் பற்றியதோடு பகவான் கூறியது போன்று சேவைப் பணிகளை முன்னெடுத்தார் அவர் பணி சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சைவமும் தமிழும் யாழ் மண்ணில் காலத்துக்காலம் தோன்றி சைவமும் தமிழும் வளர்ச்சி பெற அமையப் பெற்ற மூத்த நிறுவனமான சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் தில்லைக் கூத்தனின் சக்தி சிவகாமி அருள் பாலிக்கும் ஆலய செயலாளராகவும் இறுதி மூச்சுவரை நற்பணி புரிய கிடைத்த பேறும் தெய்வீகத்தின் பாற்பட்டது.

தமிழின் சுதந்திர வேட்கை வியாபித்து நெருக்கடியான நிலையெத்திய கால கட்டத்தில் அமரரின் பயணம் முடிவானது. ஆயினும் அன்னாரின் உருக்கமான பாடல்களும் பிரார்த்தனைகளும் அனைவரும் சாந்தி, சமாதானம், நிறைந்து வளமுடன் வாழ இவ்வாண்டு கோடிகாட்டி நிற்கின்றது.

பசுவான ஆன்மா பதியாகிய மரமாத்மாவுடன் இணையும் பாதையில் சென்ற தர்ம யாத்திரை முடிவு பெற்று சாந்தி பெறுவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"கமலபதி"
561/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**- மு.க. முருகையா**
ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காள மணிவிளக்கே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உளநலம்

சுகம், நலம், ஆரோக்கியம் போன்ற சொற்களை நாங்கள் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகின்றோம். இவை பொதுவாக எமது உடல் சார்ந்த நிலைமைகளை – நோய் அல்லது நோயற்ற நிலைமைகளை விபரிப்பதாகவே அமைந்து விடுகின்றன. ஆயினும் "நலமாக இருத்தல்" என்பது உடல் சார்ந்த நிலைமைகளையும் தாண்டி உளம் சார்ந்த, சமூகம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த நிலைமைகளையும் விபரிப்பதாகவே அமைய வேண்டும். ஏனெனில் உடல், உளம், சமூகம், ஆன்மீகம் என்பன ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதுடன் ஒன்றில் பிரச்சினை ஏற்படும் போது அது மற்றவற்றைப் பாதிப்பதாக இருப்பதனையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். உதாரணமாக, சமூகத்தில் வறுமை நிலவும் போது போஷாக்குக் குறைந்த, உடல் மெலிந்து வயிறு ஊதிய சிறுவர்களை அது உருவாக்கும். இவ்வாறன சிறுவர்கள் உற்சாகம் குன்றியவர்களாகவும் அடிக்கடி சினந்து, எரிச்சற்பட்டு அழுபவர்களாகவும் இருப்பார்கள். இன்னுமொரு உதாரணமாக, திடீரென்று தந்தையை இழந்த சிறுமி அந்த இழப்பு பிரதியீடு செய்யப்படாத நிலையில் மனம் சோர்ந்து, கல்வியில் அக்கறை காட்டாது, சாப்பிடுவதில் நாட்டமில்லாது, நாளடைவில் சளி, காய்ச்சல் போன்ற நோய்களுக்கு ஆளாகுவதைக் காணலாம்.

உடல் விளைவுகள் எனும்போது அவற்றை இலகுவாக அடையாளம் காணலாம். ஆனால் உளம் அல்லது மனம் என்பதனை வெளிப்படையாகக் கண்டு உணர்வது கடினம். ஆயினும் ஒரு பிள்ளையினது சிந்தனை, செயற்பாடு, உணர்ச்சி வெளிப்பாடு, நடத்தைக் கோலங்கள், கற்றல் விருத்தி, ஆக்கத்திறன் போன்வற்றை அவதானிப்பதன் ஊடாகப் பிள்ளையின் உள்ளத்தை, மனநிலையைப் புரிந்து கொள்ளலாம். இன்னொரு வகையில் சொல்வதானால் மேற்கூறப்பட்டவற்றின் ஊடாக நாம் பிள்ளையின் உளநலத்தை அறிந்துகொள்ளலாம்.

உளநலம் என்பதனைத் தனியாக ஒரு சட்டக அமைப்புக்குள் அடக்கிவிட முடியாது. அது ஆரோக்கியமான உடல்நிலை, ஆரோக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமூகச்சூழல், ஆரோக்கியமான ஆன்மீக ஈடுபாடு என்பவற்றோடு தொடர்புடையதாகவே இருக்கின்றது.

பொதுவாக மனதினுடைய செயற்பாட்டை உணர்ச்சிகள், அறிவாற்றல், மேலும் இவற்றின் வெளிப்பாடான நடத்தைகள் என்று பிரித்து நோக்கும் ஒரு மரபு இருக்கின்றது. உளநலமுடைய சிறுவரில் இந்த ஒவ்வொரு தொகுதியினதும் இயக்கப்பாடுகள் ஆரோக்கியமானதாகக் காணப்படும். இன்னொரு வகையில் சொல்லப்போனால், ஒரு சிறுவனின் உணர்ச்சிகள், அறிவாற்றல், நடத்தைகள் ஆரோக்கியமாக இருக்கின்றபொழுது, அச்சிறுவன் உளநலத்துடன் இருப்பதாக முடிவு செய்யலாம்.

உளநலம் உள்ள பிள்ளைகள் அவர்களின் வயதிற்கு ஏற்றதாகவும் சம்பவங்களுக்கு ஏற்றதாகவும் துலங்களை வெளிப்படுத்துவதனை அவதானிக்கலாம். ஒருவர் தமது நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகளைச் சிறப்பாகச் செய்யக் கூடியதாக இருப்பதோடு இயல்பு வாழ்க்கை வாழக்கூடியதாகவும் இருக்கின்ற நிலையே சிறந்த உளநலம் எனலாம்.

உளநலம் உள்ள சிறுவர்களின் இயல்புகள்

பிள்ளைகளின் உள ஆரோக்கியம் எவ்வாறான நிலையிலே இருக்கின்றது என்பதை அவர்களது செயற்பாடுகள் மூலம் அறிந்துகொள்ளலாம். பிள்ளைகளது சமவயதுக் குழுக்களுடனான செயற்பாடுகள், உணர்வுகளை வெளிக்காட்டும் தன்மை, உற்சாகம், அக்கறையுடன் தொழிற்படுதல், நம்பிக்கைக்குரியவராக இருத்தல், அவர்கள் குடும்ப மட்டத்தில் செயற்படும் பாங்கு போன்றவற்றிலும் சிறுவர்களில் உளநலத்தின் தன்மை வெளிப்படுகின்றது. பிள்ளைகளின் நடத்தைகள் வெவ்வேறு வயது விருத்தி நிலைகளில் வெவ்வேறு விதமாக அமைகின்றன. எனவே பிள்ளைகள் தமது வயதிற்கு ஏற்ற நடத்தைகளை வெளிப்படுத்துவார்களாயின், அவர்களது உளநலம் சிறப்பாக இருக்கின்றது என்கின்ற கருதுகோளிற்கு நாம் வரமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர்களின் உளநலனைக் கணிப்பீடு செய்கின்ற மரபு இருக்கின்றது. உதாரணமாக, வகுப்பறையில் மற்றைய மாணவர்களோடு சிறந்த உறவினை வைத்திருத்தல், குடும்ப அங்கத்தவர்களோடு நல்ல உறவினைப் பேணுதல், குடும்ப சூழல், பாடசாலைச் சூழல் என்பனவற்றிலே இருக்கின்ற ஆரோக்கியமான ஒழுங்கு விதிகளைப் பேணி மதித்து நடத்தல், பிறருக்கு உதவி செய்தல், மற்றையவர்களிடம் தேவைகருதி உதவிபெறத் தயக்கம் காட்டாமை, வகுப்பின் அல்லது குழுவின் நன்மை கருதி நேர்மையான முறையில் செயற்படுதல் போன்ற இயல்புகள் உள்ள சிறுவர்களின் உளநலம் பொதுவாகச் சிறப்பான முறையில் அமைந்ததாக இருக்கும். எனினும், இப்பிள்ளைகளின் குடும்பம், பாடசாலை போன்ற சமூகச் சூழல் பிரச்சினைக்குரியனவாக இருக்கும் போது உளநலம் உள்ள பிள்ளைகள் அச்சூழலுக்கு இசைந்து போகாது தமது எதிர்ப்பைக்காட்ட முயற்சி செய்வதை ஆரோக்கியமானதென்றே கருதவேண்டும்.

எல்லாப் பிள்ளைகளது வாழ்விலும் மகிழ்ச்சி, துக்கம், கோபம், இழப்பு, பயம், விரக்தி, கசப்பு போன்ற உணர்வுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களிலே அச் சந்தர்ப்பத்திற்கேற்ற துலங்கலைச் சரியான அளவிலே பிள்ளை வெளிப்படுத்துமாயின் அப்பிள்ளையின் உளம் நலமாக இருக்கிறது எனும் முடிவுக்கு வரலாம். உளநலம் குறைவான பிள்ளைகள் குறித்த சந்தர்ப்பத்திற்கான துலங்கல்களை ஒழுங்கற்ற முறையில் மாறி வெளிக்காட்டுபவர்களாக இருப்பார்கள், அல்லது அவற்றைக் குறைந்த அளவில் அல்லது அளவுக்கு அதிகமாக வெளிக்காட்டுபவர்களாக இருப்பார்கள். சிலவேளைகளில் துலங்கல் எதையும் வெளிக்காட்ட முடியாதவர்களாகவும் இருப்பார்கள்.

சாதாரணமாக நல்ல உளநலம் உள்ள பிள்ளைகள் தமது சகபாடிக் குழுக்களுக்கு முன்மாதிரியானவர்களாகவும், சகபாடிக் குழுக்களால் மதிக்கப்படுவர்களாகவும் இருப்பர். இதைவிட, சிறந்த உளநலம் உள்ளவர்கள் குடும்பத்துடனும், வகுப்பறை, பாடசாலைச் செயற்பாடுகளுடனும், சமூகத்தோடும் ஒத்திசைந்து நடக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளநலம் உள்ள பிள்ளைகள் பொருத்தப்பாடாக ஒளிவுமறைவு இன்றி மனந்திறந்து பேசும் இயல்பினை உடையவர்களாக இருப்பார்கள். மற்றவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வதும், மற்றையவர்களை நம்புவதும், நம்பிக்கையுடன் செயற்படுவதும் உளநலம் உள்ள பிள்ளைகளிடம் காணப்படுகின்ற இயல்புகள் ஆகும். இவர்கள் பிறர் மீது அன்பு உடையவர்களாக இருக்கின்ற அதேவேளை பிறரது அன்பையும் பெறக்கூடியவர்களாக இருப்பார்கள்.

உளநலமான பிள்ளைகள் தங்கள் மீது விருப்பம் உள்ளவர்களாக இருப்பதோடு தம்மைப்பற்றிய ஒரு நல்ல அபிப்பிராயத்தையும் வைத்திருப்பார்கள். தமது பெயரைச் சொல்லும் போதும், கேட்கும் போதும், தம்மைப்பற்றி நினைக்கும் போதும் அவை அவர்களுக்கு நல்ல உணர்வைத் தருவதாக இருக்கும்.

கதை கூறுதல், கதை கேட்டல், பாவனை செய்தல், ஆடல் பாடல்களிலே ஈடுபடுதல், படங்கள் வரைதல் போன்றவற்றிலே ஒன்றிலேனும் நாட்டம் உடையவர்களாக இருப்பார்கள்.

சிறந்த உளநலம் உள்ளவர்கள் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் சரியான முறையிலே கையாளக்கூடியவர்களாக இருப்பார்கள். மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒருவரது உளநலத்தின் தன்மையினை இலகுவாக அறியமுடியாமல் இருப்பினும் முரண்பாடுகள், கசப்பான அனுபவங்கள் என்பன ஏற்படுகின்றபோது அவற்றை அணுகுகின்ற முறையிலே உளநலத் தன்மையினை இனங்கண்டு கொள்ளலாம்.

## உளநல மேம்பாடு

பிள்ளைகளின் உளநலத்தை இயலுமானளவு மேம்படுத்த முயற்சிப்பது அவசியம். அவர்களது வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஏற்றவாறு செயற்பாடுகள், வாய்ப்புகள் அமைகின்றபொழுது உளநல மேம்பாடானது தானாகவே நடைபெறும். எனினும் சில பிள்ளைகள் உளநலக் குறைபாடான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலையிலே இருக்கக்கூடும். அவர்களது உளநலத்தை செம்மையடைச் செய்ய முயலும் பொழுது, அவர்களை மற்றவர்கள் முன்பு அடையாளப்படுத்தி, தனிமைப்படுத்தி அணுகுவதை இயன்றளவு தவிர்த்துக்கொள்ள வேண்டும். முடியுமானவரையில் ஏனைய மாணவர்களுடன் இணைந்த செயற்பாடுகளின் மூலம் உளநலக்குறைபாடுள்ள பிள்ளைகளைச் செம்மையாக்கல் நல்லது.

உளநலம் செம்மையாக்கப்பட வேண்டிய பிள்ளைகளை அவர்களது நடத்தைப் பாங்குகள் மூலம் சுலபமாக இனங்கண்டுகொள்ள முடியும்.

❈ சரியான காரணம் இல்லாமலே அடிக்கடி அல்லது எந்த நேரமும் அழுதல்.

❈ நித்திரை குறைவாக இருத்தல் அல்லது நித்திரை குழம்புதல்.

❈ பயங்கரமான கனவுகளைக் காணுதல்.

❈ அளவிற்கு மிஞ்சிய நித்திரை.

❈ அளவிற்கு மிஞ்சிய பயத்தினால் நடுங்குதல்.

❈ உணவிலே அக்கறை செலுத்தாமல் இருத்தல்.

❈ படுக்கையை நனைத்தல்.

❈ முரட்டுத்தனம் காணப்படுதல்.

❈ மூர்க்கமான சுபாவத்தை உடையவர்களாக இருத்தல்.

❈ தேவை எதுவுமின்றி உரத்துச் சத்தமிடல்.

❈ காரணமின்றித் தலையிடி, முதுகு வலி, வயிற்றுக்கோளாறு, கண்குத்து போன்ற மெய்ப்பாட்டு அறிகுறிகள் காணப்படுதல்.

❈ அதிகளவிலே ஒதுங்கி இருத்தல்.

❈ தம்மிலும் பிறரிலும் நம்பிக்கையீனம் கொண்டிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





- ❇ சேர்ந்து விளையாட முடியாத தன்மை காணப்படுதல்.
- ❇ ஞாபகக் குறைவு ஏற்படுதல்.
- ❇ அமைதியின்றி அந்தரப்படுதல்.
- ❇ வேலைகளைச் செய்து முடிக்க இயலாமல் இருத்தல்.
- ❇ எதிர்காலம் பற்றிய மறையான எண்ணம் இருத்தல்.
- ❇ ஒழுங்கற்ற பாடசாலை வரவு காணப்படுதல்.

## உளநலத் தேவைகள்

உளநலம் உள்ள ஒரு பிள்ளையின் உருவாக்கத்திற்குத் தேவையான செயற்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ❇ பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளான தூய நீர், போசாக்கு உணவு, தூய காற்று, மருத்துவ சுகாதார வசதிகள் என்பன கிடைக்க வகைசெய்தல்.
- ❇ குடும்பச் சூழல் அன்பானதாகவும், ஆதரவு கொடுப்பதாகவும், ஒற்றுமையானதாகவும் இருத்தல்.
- ❇ பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தல்.
- ❇ பிள்ளைகள் பார்த்துப் பின்பற்றுவதற்குரிய நல்ல முன்மாதிரிகள் கிடைத்தல்.
- ❇ நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு வழிசெய்தல்.
- ❇ எதிர்கால நிகழ்வுகளைத் திட்டமிட்டு நிகழ்த்தி ஊக்குவித்தல்.
- ❇ நடந்து முடிந்த ஆனால் மறக்கமுடியாத நிகழ்வுகளை அறிதலும், அவை நிகழ்ந்தமைக்கான காரணங்களை அறிய முனைதலும், அவற்றை ஏற்றுக்கொள்ளலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- உடல் உள விருத்திச் செயற்பாடுகள் வயதிற்கு ஏற்றவையாய் இருக்கின்றனவா என அவதானித்து பின்னடைவுகள் காணப்படின் தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

- இழப்புகள், உள நெருக்கீடுகள் என்பன ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறைத்தல்.
- கற்றல் வாய்ப்புக்களை வழங்குதல், போதிய உகந்த தூண்டல்களை. புதிய அனுபவங்களை வழங்குதல்.

நாளாந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களை வழங்குதல்.

தன்னம்பிக்கை, சுயசெயற்பாடு, கூட்டுச் செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

பலவிதமான உறவுகள், தொடர்புகள், விளையாடும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

இவை போன்ற காரணிகளை விளங்கிக்கொண்டு அவற்றை எமது குடும்பம், சூழல், பாடசாலை, சமூகம் என்பவற்றிலே ஏற்படுத்துவதற்கு வழிகாட்டுவதன் மூலமே நாம் ஆரோக்கியமான உளநலம் உடைய சிறுவர்களை உருவாக்கலாம்.

நன்றி

**"சிறுவர் உளநலம்"**
சாந்திகம் வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எங்கள் தலைவர் பசுபதி

ஐயறிவுடைய உயிர்கள் மரஞ்செடி, கொடி முதலாக விலங்குகள் ஈறாகவுள்ளன.

ஆறறிவுடைய உயிர்கள் மக்கள் எனப்படுவர். மக்கள் எண்ணியதை பேசவும் எழுதவும் அவற்றின் வாயிலாக பிறர்க்குணர்த்தவும் கூடிய பெரும் தகுதி வாய்ந்தவர்கள்.

மனித பிறவி எடுத்தும் ஆறறிவு படைத்தும் எத்தனை மக்கள் மனிதர்களாக மனிதம் நிறைந்த மக்களாக வாழ்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டியே உள்ளது.

ஆனால் அமரர் பசுபதி அவர்களை மனிதத்துவம்மிக்க மனிதனாக நாம் கண்டோம்.

1983ம் ஆண்டு எமது சங்கத்திற்கு நேர்மையுள்ள நல்ல ஒரு தலைவர் தேவைப்பட்டது. அவ்வேளை திருவாளர் சுப்பிரமணியம் பசுபதி அவர்கள் எமது கண்ணில் தென்பட்டார். அவரை நாம் அணுகி சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி நானும் எனது நண்பர்கள் சிலரும் கேட்டுக்கொண்டோம். முதலில் மறுத்தார். எமது வற்புறுத்தலில் இறுதியில் சம்மதம் தெரிவித்தார்.

1983ம் ஆண்டு நடந்த தேர்தலிலே கடும் போட்டியின் மத்தியில் நெறியாளர் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு தலைவர் தெரிவில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

நாம் எதிர்பார்த்தது போல் ஆளும் தரப்பினர் எதிர்தரப்பினர் என்று வேறுபாடு காட்டாது தனது கடமையினை செவ்வனே ஆற்றினார். நேர்மையாக தனது கடமைகளை ஆற்றும்போது வலுக்கட்டாயமாக தலைவராக இருந்த திரு. பசுபதி அவர்களும் மற்றும் நெறியாளர்குழு உறுப்பினர்களும் 1985 ம் ஆண்டு கூட்டுறவுத் திணைக்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தியோகத்தரைக் கொண்ட ஒரு நெறியாளர் குழு நியமிக்கப்பட்டது. இவ் நெறியாளர் குழு பல தோல்விகளைக் கண்டமையால் மீண்டும் ஒரு தேர்தல் மூலம் நெறியாளர் குழுவைத் தெரிவு செய்ய 1986ம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த இக்கட்டான காலகட்டத்தில் தலைமைப் பதவியையோ, நெறியாளர் குழு உறுப்பினர் பதவியையோ ஏற்க பலர் பின் நின்றனர். அவ்வேளை திரு. சு. பசுபதி அவர்களும் நண்பர்களும் என்னைத் தலைமைப் பதவியை ஏற்கும்படி கூறினார்கள். நானும் அக்காலத்தின் நிலையில் தயங்கினேன். திரு. சு. பசுபதி அவர்கள் அவ்வேளையில் கூறிய வார்த்தைகள் "என்றும் உங்களுக்கு துணையாக இருப்பேன்" என்று உறுதியளித்தார். அவரதும் நண்பர்களினதும் வேண்டுகோளை ஏற்று நான் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றேன். அன்று தொடக்கம் அவர் அமரத்துவம் அடையும் வரை எமது சங்கச் செயல்பாட்டில் ஏனைய கூட்டுறவாளர்களுடனும் என்னுடனும் சங்க வளர்ச்சிக்காக சேர்த்து உழைத்தார்.

அமரர் பசுபதி அவர்கள் 23 ஆண்டுகள் பொதுச்சபை உறுப்பினராகவும், 14 1/2 ஆண்டுகள் நெறியாளர் குழு உறுப்பினராகவும் 09 ஆண்டுகள் உபதலைவராகவும், 02 1/2 ஆண்டுகள் தலைவராகவும் இருந்து செயல்பட்டார்.

அன்னாரது திடீர்மறைவு எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியது.

அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், நண்பர்கள் அனைவருடனும் கூட்டுறவாளர்களாகிய நாமும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- வெ. கனகசபாபதி**
தலைவர்
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய முன்னாள் செயலராய் ...

திருமணத் தொடர்பால் திருநெல்வேலியில்
இல்லறப் பயன்கள் இணையில் சிறப்புடன்
கல்வி தொழில் நலக் கடமை நினைவுடன்
எல்லோர்க்கும் இனியராய் எம்மிடையே ஒன்றிணைந்து.
நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்.....?
பண்பு சேர் அன்பு – நன்மை பசும் மொழி – இன்முறுவலுடன்
இலக்கியம் – சமயம் – கலை, இணைந்த
பத்திரிகைத்துறை என நயந்து
தான் கற்றலும் நல்வழியாய் நல் வழியாய் எழுதுதலும் ....
இணைந்ததோர் வாழ்க்கையாக
இடர்களிடைத் தான் நிமிர்ந்தும் ...
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்து
நலனோம்பு தலைவரென்றும்,
திருநெல்வேலி ஸ்ரீ, சிவகாம சுந்தரி ஆலய
சேவையில் சிறந்த நற் தலைவர் என்றும் ....
திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லச் செயலராய்
சமூகத்தின் பணிபுரிந்தும் இன்று.....
எம் மன நினைவாய்
இறைபதம் சேர்ந்தீர்....!
ஐய! நின் புதல்வரும்
உம் வழி தொடர்ந்து
எம்முடன் ... பணிபுரிவார் என்ற நம்பிக்கையோடு ....
உங்கள் ஆத்மா சாந்தி பெற ...
எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களை
ஏற்றி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கலாமன்ற சனசமூக நிலையம்,**
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Sinna - Appapa

Our beloved Sinna - Appapa we will miss him dearly "Thal - attu" is the song that he used to sing to me, when I was a young girl. and I will never forget that sweet soothing voice that sang to me.

I have always remem bered Sinna - Appapa as some one who is kind, generous and very intellectual. He's an amazing person to be around and his presence alane will make you want to laugh. making every one around him feel com fortable was his speciall.

Even though he's grand uncle, I have always thought to him as a grand Iather frgure, since I never got to meet either of my grand fathers.

I had the privilege of seeing Sinna - Appapa in may of 2003, exactly one year after Igot married to kishan, we both got the chance to spend one fun filled week with him in Jaffna. I'm so happy that Kishan got the chance to meet him.

He will always stay very close to our hearts we love you Sinna - Appapa.

Tharani, Janakar, Janthan, Kishan and Kavin.

Your beloved Grabd Niece / Nephews and Giral.

**- Grand Nephew.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மறக்க முடியாத எனது அன்புச் சின்னமாமா

25-08-2006 அன்று சின்னமாமா இறைவனடி சேர்ந்தார் என்ற சற்றும் எதிர்பாராத செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆற்றொனாத் துயருமடைந்தேன். 2 வாரங்களுக்கு முதல் நான் தொலைபேசியில் பேசிய போது கூட மிகவும் மகிழ்ச்சியோடு கதைத்தார். 2003ம் ஆண்டு நாங்கள் இலங்கை சென்றிருந்தபோது அவருடன் சந்தோஷமாக கழித்த பொழுதுகளை மறக்க முடியவில்லை. நீதிமன்றில் நெடுங்காலம் பணியாற்றிய காரணமோ என்னவோ அவர் எந்த பிரச்சினையை அனுகினாலும் அதன் பக்க விளைவுகளை ஆராய்ந்து வழக்கம்.

சின்னமாமா அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் பல சமூக சேவைகளில் ஈடுபட்டதுடன் பகுதிநேரம் ஆங்கிலம் கற்பித்தும் தன்னை முழுநேரமும் ஏதாவது ஒரு பணியில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை 2003ல் இலங்கை சென்றபோது அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.

கனடாவிலிருந்து இலங்கை சென்று மாமாவை சந்தித்த எனது நண்பர்கள் பலரும் அவரது சமூக சேவை மனப்பான்மையும் அவரது நகைச்சுவையுடன் கூடிய அமைதியான உரையாடல்களையும் சிலாகித்துக் கூறும் போதெல்லாம் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

1978ம் ஆண்டு இரத்மலானையில் சின்னமாமாவுடனும் சிவாவுடனும் நானும் ஜீவாவும் தாரணியும் ஒன்றாய் பெருமகிழ்வாய் வாழ்ந்த அந்த ஒரு வருட காலம் என்றும் எங்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்திருக்கும். சின்னமாமா "தாலாட்டு தாலாட்டு" என்ற பாடலை தனக்கே உரிய இசையுடன் பாடி தாரணியை உறங்க வைப்பதை ஜீவா அடிக்கடி நினைவூட்டி மகிழ்வதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதிக் காலங்களில் சின்னமாமா தன்னை சாயி பஜனைகளாலும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். அவரை பொறுத்தவரை அமைதியாக இறைவனடி சேர்ந்து விட்டார். இதைச் சிறிதும் எதிர்பார்த்திராத எங்களால் தான் இதை தாங்க முடியவில்லை.

ஈடுசெய்ய முடியாத சின்னமாமாவின் இழப்பால் துயருறும் மாமி பிள்ளைகள் குடும்பத்தினருக்கும் அவரது பாசமுள்ள சகோதரங்களான அம்மா பெரியமாமா குடும்பத்தினர்க்கும் இத்துயரைத் தாங்கும் சக்தியை அளிக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

சின்னமாமாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவார்.

*நேற்றிருந்தார் இன்றைக்கு இங்கே இல்லை*
*நீள்புவியின் பெருமையிது என்றே உண்மை*
*சாற்றுகவி வள்ளுவனும் சொன்ன அந்தச்*
*சத்தியமாம் வார்த்தையினைச் சரியாய் நோக்கில்*
*ஏற்றிடுவோ முண்மையதே சனித்த பேர்கள்*
*என்றோ ஒரு நாளுலகு நீத்தல் திண்ணம்*
*கூற்றுவனார் வயது குணம் ஆண் பெண் பேதம்*
*கொள்வதில்லை என்பதனால் அமைதி கொள்வோம்.*

**அன்பு மருமகன்**
**நா. தெய்வேந்திரன்**
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலட்சியவாதி. திரு. சுப்பிரமணியம் பசுபதி அவர்கள்

என்றும் புன்முறுவல் பூத்த முகம், நெற்றியில் திருநீறும், சந்தனைத் திலகமும், உயர்ந்த கம்பீரமான தோற்றம் மென்மையான இனிமையான அடக்கமான குரல். நகைச்சுவை துமபும் கதையுடன் கூடிய பேச்சு இத்தனையும் கொண்டவரே உத்தமர் பசுபதி அவர்கள்.

முன்பு யாழ் "முரசொலி" நாளிதழின் ஆசிரியர் குழாத்தில் ஒருவராக இருந்து, அப்பத்திரிகை சிறந்த முறையில் வெளிவர உதிவியவர் திரு. பசுபதி அவர்கள் இவரின் மறைவு குறித்து "மூத்த எழுத்தாளர் திரு. பசுபதி அவர்கள் காலமானார் எனத் "தினக்குரல்" தன் செய்தியில் வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ். கல்வித்திணைக்கள நிதி உதவியாளராகக் கடமையாற்றியபோது, கல்விப் பணிப்பாளர் முதல் கணக்காளர் வரை பாடசாலை அதிபர்களும் நிதிப்பிரமாணங்களில் சந்தேகங்கள் ஏற்பட்டால் இவரிடடே உசாவித்தெளிவு பெறுவர். சீறிச்சினக்காது எந்த வேளையிலும் எவருடனும் அன்போடும் பண்போடும் பழகிப் புன்சிரிப்புடன் வாழ்ந்த பெரியார். பின்தங்கிய பாடசாலைகளின் தேவைகளை அறிந்து திணைக்களம் மூலம் அவற்றை நிறைவு செய்து கொடுக்கும் கர்மவீரர்.

நிதிமாத்திரமன்றி நீதித்துறையிலும், காட்சிகளின் உரையினை நீதவானிடம் "மொழிபெயர்த்துக் கூறும் முதலியாராக பல்லாண்டு காலம் பணியாற்றியவர். இவ்வாறு நடுநிலை தவறாது எங்கும் பணி புரிந்தமை மக்கள் சேவகனாகத் திகழ்ந்தமை ஆகிய காரணங்களினால் தீவு முழுவதற்குமான சமாதான நீதவான் பதவி இவரைத் தேடி வந்தது.

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தலைவராக, திருநெல்வேலி சிவகாமசுந்தரி அம்மன் கோவில் அறங்காவல் சபைச் செயலராக அரும்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆற்றிய பசுபதி அவர்கள் ஒரு சிறந்த முருக பக்தர். வெள்ளிதோறும், மற்றும் விசேட தினங்களிலும் நல்லூர் முருகனைத் தரிசிக்கத் தவறுவதில்லை. தேவாரங்களைப் பண்முறை தவறாது இனிமையாகப் பாடுவதுடன், இவ்வாண்டு நல்லூர் முருகன் 6ம் திருவிழாவன்று நாவலர் மணி மண்டபத்தில் சைவச் சிறுவர் இல்ல அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பண்ணிசை பாடிப் பலரின் பாராட்டைப் பெறவும் வழிசெய்து மகிழ்ந்தனர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பெற்ற 1923ம் ஆண்டு காலத்தில் இருந்தபடியே "பாலறாவாயர் பொற்றாளர் ஏந்திய படியான இலச்சினையும் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மகுட வாசகமும் மீண்டும் பொறிக்கப்பட்டதும் இவர் காலத்திலேயே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைக்கும் 50 ஆண்டுகளின் முன் இந்து போர்ட் இராசரத்தினம் ஐயா அவர்கள் கண்ட கனவை நனவாக்கும் வகையில், இன்று இணுவிலில் சைவச் சிறுவர் இல்ல நிறைவாழ்வு இல்ல முதலாம் கட்டம் நிறைவு பெற்றதைக் கண்டு உண்மையில் மகிழ்ந்தவர் திரு. பசுபதி அவர்கள்.

இங்கே எம் சிறுவர் இல்லம் எந்நாளும் சுத்தமாகவும் அழகாகவும், இருக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த இவர், சபையின் அனுமதியுடன் இவ்வாண்டில் எல்லா மண்டபங்களுக்கும் அழகாகத் தீந்தை தீட்டுவித்துள்ளார். பிள்ளைகளின் சமயக் கல்விக்கான அறநெறிப் பாடசாலையும் இவரது காலத்திலேயே இங்கு ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வில்லப் பழைய மாணவர் உதவியுடன் இல்ல மாணவர் அனைவரையும் நயினாதீவு நாகபூஷனி அம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றமையும் இவரது சிறந்த பணிக்கு ஒரு உதாசனம். இவ்வாறு மாணவரது உடல் உள வளர்ச்சியுடன் அவரது கல்வி வளர்ச்சியிலும் இவர் கசெனை கொண்டிருந்தார். 11-08-2006 ல் இருந்து தொடர்ந்து மூன்று நாட்களுமே நாமெல்லாம் வீட்டோடு அடங்கி இருக்கத் திரு. பசுபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவர்கள் பிள்ளைகளின் இடம் நாடி அவர் தம் (உணவு) பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துக் தனக்கென வாழ்த்தகைமையாகினார்.

இவ்வாறு அமைதியும் ஆற்றலும் உடைய இவர் பல தொண்டு நிறுவனங்கள் எம் இல்லங்களுள் புகுந்து மதம் மாற்ற முனைவது கண்டு மனம் பொங்குவார்.

இவ்வாறு எம் எல்லோர் மனதிலும் தம் செயலால் நிறைந்த திரு. பசுபதி ஐயா அவர்களுக்கு நாம் செய்யும் கைமாறு, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்வதேயாகும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


– அ. தற்பராமனந்தன்
தலைவர்
சைவ வி. வி. சங்கம்
தீவு முழுவதற்குமான
சமாதான நீதவான்.

கந்தரோடை,
சுன்னாகம்.


கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்கு வேவை செய்பவன் உண்மையில், கடவுளுக்குச் சேவை செய்பவன் ஆகிறான்.

ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போவதுண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள். அவர்களுக்காக இடை விடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழி காட்டுவார்.

- சுவாமி விவேகானந்தர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதம்

என்றும் போலவே
இன்றும் ஒரு விடியல்!
ஆனால்,
முகில் கூட்டங்களுக்குள்
முடங்கிப் போன
கதிரவன்!
மலர்வதற்காய் தவித்த
சூரியகாந்தி மொட்டுக்கள்!
தொலைந்து போய் விட்ட
காலை இளந் தென்றல்!
ஆம்,
காதலுக்காய் காத்திருந்த
ஒரு விழி
"தம்பி" வருகைக்காய் காத்திருந்த
இருவிழி
பாசத்திற்காய் காத்திருந்த
"பால" கர்கள்
அரவணைப்பை காத்திருந்த
இல்லச் சிறார்கள்
எல்லாமே கனவாக
ஒரு கணப்பொழுது!
இயற்கையே "விதியா"
மண்ணிலிருந்து வேரொடு
பிடுங்கி எறியப்பட்டது
ஒரு விருட்சம்!
மனிதம்!

**கனடாவிலிருந்து நேசன், பாலன்**
(பெறாமக்கள் சார்பாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கண்ணியம் மிக்க கனவான்

உலகில் பிறப்பவர்கள் யாவருக்கும் இறப்புண்டு என்பது நியதியாயினும் அமரர் உயர்திரு. சுப்பிரமணியம் பசுபதி அவர்களின் பிரிவானது எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. கண்ணியம் மிக்க கனவானாக, அரச சேவையில் செங்கோல் சரியாதவராக, உண்மையான சேவகனாக, நொந்த சமூகத்தவர்களுக்கு நேசக்கரம் நீட்டுபவராக, குடும்ப உறவுகளை வலுப்படுத்துபவனாக வாழ்ந்த பெரியவரே அமரர் பசுபதி அவர்களாவர்.

அமரர் உயர்திரு பசுபதி அவர்களுடன் ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களாக மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் எக்காரியத்தைச் செய்யினும் அதனை திறம்படச் செய்யும் வல்லமை அவரிடம் காணப்பட்டதை அறிவேன். அவர் கல்வி, இலக்கியம், ஆன்மீகம் மற்றும் சமூகவியல்துறைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்ததுடன் அவற்றைத்தேடி வாசிக்கும் பழக்கம் அவரிடம் மேலோங்கிக் காணப்பட்டிருந்தது. அவற்றை வாசிப்பதோடு நின்றுவிடாது அவற்றினை விமர்சனம் செய்யும் ஆற்றல் அவரிடத்தில் ஆழமாகப் பதிந்து காணப்பட்டிருந்தமையை காணமுடிந்தது. அவருடன் மேற்கொள்ளப்படும் சம்பாஷனைகளில் இருந்து எமது கருத்துக்கள், எண்ணங்களை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பம் நிறையக் காணப்பட்டிருந்தது. அதாவது "கண்டது கற்க பண்டிதனாவான்" என்பது போல அவர் தன்னை தனது அறிவாற்றலைப் பெருக்கியிருந்தவுடன் அதனை மற்றவர்களும் அனுபவிக்கச் செய்தவர். இத்தகைய கல்விப்புலமையைப் பெற்றிருந்த அமரர் பசுபதி அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவைகளில் மிகவும் முக்கியமானது அவரிடத்தில் காணப்பட்ட சிறந்த ஆங்கிலப் புலமையாகும்.

மனிதநேயம் கொண்டவரும், அதனை மதித்தவருமான அமரர் உயர்திரு பசுபதி அவர்கள் குடும்பங்களிடையே உறவுகள் சீராக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவரது பேரிழப்பானது அவரது குடும்பத்தினருக்கு மட்டுமில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதரவற்ற சிறுவர்களின் வளவாழ்விற்குக்கூட ஒரு சவாலாக அமைந்துவிட்டது எனக்கூறல் வேண்டும்.

அமரர் இன்றும் பல ஆண்டுகள் வாழக்கூடிய உடல், உள வல்லமை கொண்டிருந்தபோதிலும் விரைவில் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து அருள்பாலிக்கும் நல்லைக்குமரன் பாதாரவிந்தத்தில் சேர்ந்து விட்டார். உயர்திரு பசுபதி அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு, குறிப்பாக அவரது பேரரான சதுர்ஷனுக்கு பெரும் பேரிழப்பாகும். என்ன செய்வது இது இயற்கையின் முடிவு. அவரது இழப்பினை தாங்கிக்கொண்டிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண் நிற்கின்றேன்.

**- பேராசிரியர் கா. குகபாலன்**
தலைவர், புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.


***ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள்***
***காதல் இருவர் கருத்தொருமித்து – ஆதரவு***
***பட்டதே இன்பம் பரனை நினைந்திம் மூன்றும்***
***விட்டதே பேரின்ப வீடு.***

– ஔவையார் –



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நன்றி நவில்கின்றோம்

26-08-2006 அன்று எம் தந்தை இயற்கை எய்திய செய்தி கேட்டு, உடன் வந்து பல வகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறிய அனைவர்க்கும்....!

எம் தந்தையின் இறுதிக் கிரியை நிகழ்வுகளில் மலர் வளையம், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியும், அஞ்சலி உரை நிகழ்வு, ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்தும் எம் துயரில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

இன்னும் எம் இல்லத் தலைவரின் நினைவாக, அவர் முன்பு எழுதி அர்ச்சனா ஞானக்கதிர் மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளைத் தொகுத்து "இறைவர்க்கொரு பச்சிலை" (சிறுகதை) "லப்பாம் டப்பாம்" (சிறுகதை) என்னும் இரு நூல்களாக நன்றியுடன் வெளியிட உதவிய - சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர்க்கும் இந்நூல்களை மிக விரைவில் அச்சிட்டு உதவிய "குருபிறின்டேர்ஸ்" நிறுவனத்தினர்க்கும்,

"பசுபதீயம்" வாழ்க்கை - நினைவுக் குறிப்புகளை வரைந்து எம் மனம் இணைந்த எல்லோர்க்கும்... நன்றிகள் என்றும்!

இங்ஙனம்
**மனைவி, பிள்ளைகள்**
**மருமக்கள். பேரப்பிள்ளைகள்.**

Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதிவரை என்னுடன் பயணம் செயத
அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எனது நன்றி

மீண்டும் ஒரு பயணத்தில் சந்திப்பதற்கு
ஆண்டவன் அருள்பாலிப்பாராக
சென்று வருகிறேன்

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org